சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 14/2016

பெயர் திரு. சுரேஷ் நாள்.06.02.2026
த/பெ.பலராமன்

**<u>2ம் பிரதிவாதி சாட்சி 1 (பி.சா.3) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கை ருக்மணி அம்மாள் தாக்கல் செய்துள்ளார். அவர் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவருடைய நகையை வைத்து சொத்துகள் வாங்கப்பட்டதாக தாக்கல் செய்துள்ளார். ருக்மணி அம்மாள் என் மனைவிக்கு பாட்டி. எதிர் வழக்குரையை நான் தான் தாக்கல் செய்தேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. ருக்மணி அம்மாளிடமிருந்து 19.08.2022 ல் கிரையம் வாங்கியதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் ஆவண எண் 2209/2022. ருக்மணி அம்மாள் 14.02.2020 ல் காலமாகி விட்டார். அதனால் காலமான பின்பு தான் ருக்மணி அம்மாள் எவ்வாறு ஆவணம் எழுதி கொடுத்திருக்க முடியுமென்றால் ஆவணம் எழுதியது 2019ம் வருடம். ஆவணம் பதிவு அலுவலகத்தில் பெற்றது 2022ம் வருடம் ஆகும். நான் 5ல் 1 பாகம் கேட்டுள்ளேன். அதற்காக நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. நான் லாரி ஓட்டுநராக தொழில் செய்கிறேன். மாதம் ரூ.30,000/- அல்லது ரூ.40,000/- வருமானம் வரும். நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ.3 ஆவணத்தை ருக்மணி அம்மாள் பிரியப்பட்டு எனக்கு எழுதி கொடுத்தார் என்றால் நான் அதை கிரையம் வாங்கியுள்ளேன்.

அதற்கு நான் கிரைய தொகை ஏதும் கொடுக்கவில்லை என்றால் ரூ.3,00,000/- கொடுத்துள்ளேன். ராதாகிருஷ்ணன் ருக்மணி அம்மாளின் மகன் ஆவார். முருகேசன் என்பவரை எனக்கு தெரியாது. 03.10.2022 அன்று முருகேசன் தன் மகன் ராதாகிருஷ்ணன் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு இல்லை என்று பாட்டி சொல்லியுள்ளார். ருக்மணி அம்மாள் அவர் கிரையம் வாங்கிய சொத்து என்று என்னிடம் கூறியுள்ளார். சொத்தை முருகேசன் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பி.த.சா.ஆ.3 ல் என் தம்பி மற்றும் மாமியார் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர். வழக்கு சொத்து முருகேசன் சொத்து என்றாலும், அதனை அவர் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. ருக்மணி அம்மாளுக்கு வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், அவரிடமிருந்து நான் கிரையம் வாங்க இயலாது என்றாலும் சரியல்ல. பி.த.சா.ஆ.3 ல் நான் கூறும் ஆவணம் எண் குறிப்பிடவிலலை என்றால் சரியல்ல. முறையாக ஆவணம் எழுதியிருந்தால் எனக்கு ஆவண எண் மற்றும் ஆவண தேதி தெரியும் என்றாலும், நான் அதனை தவறாக கூறினேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணை சங்கதிகள் மாறுபடுகின்றன என்றால் சரியல்ல. உயில் உள்ளது தெரிந்தும் 1 ம் பிரதிவாதிக்கு சொத்துகள் செல்ல கூடாது என்பதற்காக ஆவணங்கள் உருவாக்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. உயில் படி 1ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள பாகம் எனக்கு கிடைக்கத்தக்கது

இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கூறியதின் பேரில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதிகள் என்னை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.